## NEW CONGREGATION IN KARUR DISTRICT




R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Aug. 2015

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

***Cell : 94435 58041***
***Phone : 04543 263 278***
*E-Mail arjunanglory@gmail.com*
*www.thewordofchristindia.com*

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | ஆகஸ்ட் 2015 | கனி 9

## லூக்கா





# Luke

THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ்
அவர்களின் வேதபாடம்,
சகோ.ராஜாமணி
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 180

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்.

1. தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பவன் யார்?
2. தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே எவைகளைத் தேடுங்கள் அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள் என தீர்க்கன் சொல்கிறான்?
3. சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி எதற்கேதுவாக முயற்சிபண்ணு என்கிறார் பவுல்?
4. தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே எந்த தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று?
5. யந்நேயும், யம்பிரேயும் யாருக்கு எதிர்த்து நின்றார்கள் என பவுல் குறிப்பிடுகிறார்?
6. எந்த ராஜாவின் நாட்களில் கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலமாய் முந்தின தீர்க்கதரிசிகளைக்கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளையும் கேளாதபடிக்குத் தங்கள் இருதயத்தை வைரமாக்கினார்கள்?
7. தீத்து ஒரு உத்தம குமாரனா?
8. உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள் என்று சொல்லும் தீர்க்கன் யார்?
9. நான் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக ஆயத்தம்பண்ணும் என்று யாருக்கு பவுல் எழுதுகிறார்?
10. தன் தம்பியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுத எகிப்தின் அதிபதி யார்?

### லூக்கா

- ஒரு பிரியமான வைத்தியன் - கொலோ.4:14
- கண்கண்ட சாட்சி லூக்கா - லூக்கா1:1-4
- வேதாகமத்தில் இரண்டு புத்தகங்களை லூக்கா எழுதியிருக்கிறார் (லூக்கா மற்றும் அப்போஸ்தல நடபடிகள்)
- பவுலுடைய ஊழியத்தில் அநேக முறை உடன் இருந்தவர் - (2தீமோ.4:11)
- அப்.16:10-40 ன்படி துரோவா பட்டணத்தில் பவுலுடன் இணைந்து அவருடைய இரண்டாவது ஊழியப் பயணத்திலும் பிலிப்பி பட்டணத்துக்கு வந்து அங்கு பவுலுடன் தங்கி அதன்பின் மூன்றாவது ஊழிய பயணத்தில் எருசலேமுக்கு போனார்.
- லூக்காவின் சிலபகுதிகள் இன்றும் பாதுகாக்கப் பட்டுள்ளன.






Luke

சிறுவர் பகுதி

# உலகத்தைக் கலக்குகிறவர்கள்

*வேதபகுதி: அப்போஸ்தலர் 17:1-10*



ஊரைச் சுற்றுகிறவர்களை பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் இன்று உலகத்தைக் கலக்குகிறவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளப் போகிறோம். அவர்கள் யார் என்று தெரியுமா? வேறு யாரு பவுலும் சீலாவுந்தான். கலக்குகிறவர்கள் களங்கப்படுத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் சுவிசேஷத்தினாலே உலகத்தை கலக்குவதாக இயேசுவை விசுவாசியாத யூதர்கள் வைராக்கியம் கொண்டு இவர்கள் மீது குற்றஞ்சுமத்தினார்களாம்.

இந்த இரண்டு தாசர்களுடைய வேலை என்னவென்றால் செல்லுமிடமெங்கும் சுவிசேஷத்தை அறிவிப்பது அநேகரை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவது. ஒரு முறை அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்து அங்குள்ள யூதருடைய ஜெப ஆலயத்தில் போய் மூன்று ஓய்வுநாட்களில் இயேசுவை பற்றி பிரசங்கித்தார்கள். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள். சத்தியத்தை நம்புகிறவர்கள் சத்தியத்தை பிரசங்கிக்கிற கூட்டத்தில் இருப்பார்கள் அல்லவா!

எல்லா இடங்களிலும் நல்லவர்கள் இருந்தாலும் அங்கும் சில தீயவர்கள் இருப்பார்கள். அதைப்போல பவுல் பிரசங்கித்த இடத்தில் சில தீயவர்கள் இயேசுவை விசுவாசியாமல் இவர்களுக்கு விரோதமாக கூட்டத்தை சேர்த்துக் கொண்டு பவுலையும் சீலாவையும் ஏற்றுக்கொண்ட யாசோனையும் சில சகோதரர்களையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு வந்து. இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டார்கள். இதைக் கேட்டவர்கள் யாசோனிடத்தில் ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டு விட்டார்கள். பின்பு பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்திற்கு அனுப்பி விட்டார்கள். அவர்கள் அங்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

ஊரைச்சுற்றி ஊதாரியாய் போனான் என்று பலர் உங்களை சொல்லியிருப்பார்கள் பரவாயில்லை. இனிமேலாவது உலகத்தை கலக்குகிற இந்த பவுல் சீலாவைப்போல வருங்காலத்திலே மாறுவதற்கு பிரயாசமெடுத்து ஒழுங்காக ஞாயிறு பள்ளிக்குச் செல்லுங்க, கர்த்தர் அதற்குரிய ஞானத்தையும் பெலத்தையும் உங்களுக்கு தருவார். குட்டையை கலக்கினால் மீன்கள் மிதக்கும், உலகத்தைக் கலக்கினால் ஆத்துமாக்கள் கிடைக்கும். நீங்கள் வருங்காலத்தில் கலக்குவீர்களா?

**மனப்பாட வசனம்:**

**"தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்" (நீதி.25:25)**





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 15    ஆகஸ்ட்-2015    கனி - 9


ஆசிரியருரை

## நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?
## *You also Want To Go Away?*



இயேசுவானவர் ஒரு முறை கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்தில் உபதேசிக்கையில் அவருடைய சீஷர்களில் அநேகர் இது கடினமான உபதேசம் என்றார்கள். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். ஆகையால் "இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்றார்" (யோவா.6:67). உபதேசம் அவர்களுக்குப்பிடித்தார்போல் இல்லாதபடியால் இது கடினமான உபதேசம் என்று பின்வாங்கிப்போனார்கள். இன்றைக்கும் ஒவ்வொருவருக்குபிடித்தார்போல பிரசங்கியார்கள் பிரசங்கம் செய்தால் மிகவும் நன்றாயிருக்கிறது என்பார்கள். ஒரு நோயாளியை சுகப்படுத்துகிற வைத்தியன், நோயாளிக்கு பிடித்தார்ப்போல வைத்தியம் செய்தால் அந்த நோய் சுகமாகுமா? நோயாளி நோயாளியாகவேதானிருப்பான். அதைப்போல ஆண்டவர் இயேசுவின் உபதேசத்திற்கு கீழ்ப்படியவேண்டிய சீஷர்கள் இது கடினமான உபதேசம் என்று சொன்னார்கள். ஆகையால் பன்னிருவரையும் நோக்கி நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். சபைகளிலும், ஒரு குடும்பம் பின்வாங்கிப்போனால் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் பின்வாங்குகிறார்கள். சத்தியம் என்னசொல்லுகிறது, நாம் சத்தியத்தின்படி நடக்க என்னசெய்யவேண்டும் என்று சிந்திப்பதில்லை. மேலான தேவனுடைய உபதேசங்களை கைக்கொள்ளுவது கடினம் என்று சொல்லுவது, நோயாளி இந்த மருந்தை சாப்பிடுவது எனக்கு கசப்பாக இருக்கிறது, ஆகையால் நான் அதை சாப்பிடமாட்டேன் என்று சொல்லுவதைப்போல இருக்கிறது. நாம் ஆவிக்குரிய நன்மைகளைப் பெறவேண்டுமானால் ஆண்டவருடைய உபதேசத்தின்படி நடக்க நம்மை அர்ப்பணிக்கவேண்டுமே தவிர அவைகள் கடினமானவைகள் என்று சொல்லுவதோ, அதை யார் கேட்பார் என்று சொல்லுவதோ, தேவனுடைய மாபெரும் வல்லமையுள்ள வசனங்களை உதாசினப்படுத்துகிறதாயிருக்கிறது.

ஆண்டவர் இயேசு பன்னிரண்டு பேரையல்லாது 70 பேரை தெரிந்துகொண்டு தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். "சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை

அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார்" (லூக்.10:16). இந்த சீஷர்களை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டார்கள். ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்களுக்கு செவிகொடுக்கிறவன் அவருக்குச் செவிகொடுக்கிறான். ஆண்டவரை ஏற்றுக்கொள்வதும், அவருடைய சுத்த சுவிசேஷத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதும் மாபெரும் காரியமாயிருக்கிறது. உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு வரக் கூடியவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றே சொல்லவேண்டும். வேதமும் "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் " என்று இயேசு சொல்லுகிறார் (யோவா.6:65). இன்றைக்கு அநேகர் கர்த்தரிடம் வரவில்லை அதற்கு காரணம் என்ன? அவர்கள் பிதாவினால் தெரிந்துகொள்ளப்படவில்லை. அவருடைய அருளைப்பெறவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவன் அவருடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனால் தெரிந்துகொள்ளப்படாதவன் அவருக்கு விரோதியாயிருக்கிறான். சிலர் கொஞ்சகாலம் வந்து நல்லவர்கள்போல நடித்து பின்பு பின்மாற்றமடைகிறார்கள். இவர்களைப் பற்றி நாம் என்னசொல்வது. இவர்கள் தேவனால் முன்குறிக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களா யிருந்திருப்பார் களேயானால் பின்வாங்கிப்போயிருக்கமாட்டார்களே.

நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்று சீஷர்களைப் பார்த்து கர்த்தர் கேட்டவுடனே; சீமோன் பேதுரு; "அவருக்குப் பிரதியுத்தரமாக; ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவா.6:68,69). அந்த சீஷனின் அறிக்கையைப் பார்த்தீர்களா? யாரிடத்தில் போவாம் என்று கேட்டான். நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்பட வேறு வழி இல்லை. ஒரு மனிதன் எனக்கு இந்த உலகத்தில் தண்ணீர் வேண்டாம். தேவன் உண்டாக்கின காய்கறிகள், நவதானியங்கள், பழங்கள் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி ஒதுக்கி வைத்திடமுடியுமா? அதைப்போல நாம் இந்தப் பூமியில் இருப்பதற்கே காரண கர்த்தாவாகிய இயேசு இல்லாமல் நாம் எங்கே போகமுடியும். அவரால் நாம் வாழுகின்றோம். நமக்கு வேண்டிய நித்திய ஜீவவசனங்கள் ஆண்டவர் இயேசுவிடம் உண்டு அவைகளை நாம் பெற்றுக்கொண்டு வாழும்போது நித்தியமான வாழ்வை பெறுவோம். அவர் நமக்கு ஜீவத்தண்ணீரை கொடுக்கிறார். இஸ்ரவேலர் இந்த ஜீவத்தண்ணீரை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தருடைய வேதம் சொல்லுகிறது. அவர் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. அவனுக்குள்ளே நித்திய காலமாய் ஊறுகிற நீர் ஊற்றாயிருக்கும். இவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்குக் கடினமாயிருக்கிறதா? அல்லது கசப்பாயிருக்கிறதா? அல்லது கடினமான உபதேசமாயிருக்கிறதா? சிந்தியுங்கள். கர்த்தர் நமக்கு எப்பொழுதும் நல்லவராகவே இருக்கிறார். அவருடைய சிருஷ்டிகளைப் பார்க்கும்போது சொல்லிமுடியாத நன்மைகளை நமக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்படி நம்மை நேசிக்கும் கர்த்தர் ஒருவர் இருக்கும்போது அவருடைய வசனங்களுக்கு நாம் செவிகொடுத்து அவைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது நமது கடமையல்லவா? யோபு என்ற தாசனுக்கு வந்த



மனத்தோற்றமுண்டு. அவர்களுடைய பலன் பின்வரும் எண்ணம் செயல்களால் கிடைக்கின்றதென்று எண்ணுகிறார்கள்.

1. அவர்களுடைய நல்ல வாழ்க்கையினால்,

2. தங்கள் பணத்தை உதாரத்துவமாகக் கொடுப்பதினால்

3. சபையில், அவர்கள் உண்மையாய் வந்தவர்களாய் இருப்பதால்

ஆ) ஆனால் இரட்சிப்பு என்பது தகுதியற்ற மனிதனுக்கு தேவனளிக்கும் ஈவு.

1. நாம் இன்னும் பாவிகளும், தேவனற்றவர்களும் பகைஞர்களுமாயிருந்தபோது, நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோம.5:8).

2. அது யாரெல்லாம் பெற்றுக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது.(வெளி.22:17)

அப்படியென்றால் இரட்சிப்பு இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு எந்தவிதமான விலையுமே இல்லையென்று அர்த்தமா? கிடையவே கிடையாது. உண்மையாகவே உலகம் முழுவதிலும் இவ்வளவு விலை கொடுத்தது வேறொன்றும் கிடையாது.

அந்த ஈவை அளிப்பதற்கான மிக அதிக விலை.

பிதா என்ன விலை வைத்தார்? (யோவா.3:16). தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? (ரோம.8:32)

1.தம்முடைய ஒரே பேரான குமாரனை பலியாகக் கொடுத்த விலையை அவர் கொடுத்தவர்.

2. நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படியாக தம்முடைய சொந்த குமாரனைக்கூட மீதம் வைக்கவில்லை.

குமாரன் கொடுக்க வேண்டிய விலையாக எதை வைத்தது? (பிலி.2:6-8).

1. அவர் தன்னுடைய மகிமையையும் இராஜரீகத்தையும் துறக்க வேண்டியிருந்தது.

2. அவர் தன்னைத் தாழ்த்தி சிலுவையின் மரணபரியந்தமும் அடிமையின் ரூபமெடுத்தார்.

பரிசுத்த ஆவியானவர் என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தது.

1. எபேசியர் 4:30-ல் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதைப் பற்றி பேசப்படுகிறது.

2. தன்னை கனவீனமாய் நடத்தும்போதும் எதிர்க்கப்படும்போதும் மனிதனோடு ஆவியானவர் நீடிய பொறுமையுள்ளவராய் துன்பம் அநுபவிக்கிறார்.

இரட்சிப்பின் ஈவை சாத்தியமாக்குவதற்கு மூன்றும் ஒன்றான தேவத்துவத்தில் ஒவ்வொருவரும் மிக அதிகமாகவே தியாகம் செய்துள்ளனர். நிச்சயமாகவே இதை அளிப்பதிலே நாம் அளிக்கப்பட்டுள்ள மிக உயர்ந்த விலையை காணமுடியும்.

இந்த ஈவை ஏற்றுக்கொள்ள செலுத்த வேண்டிய உயர்ந்த விலை. நம்மை நாமே வெறுத்துத் தள்ளவேண்டிய உயர்ந்த விலையை நாம் கொடுக்கவேண்டும்.

# பாடம் -14 இலவச ஈவின் உயர்ந்த விலை

**- Jerry Bates**

## The High Cost of A Free Gift

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**




உன்னுடைய உயர்ந்த ஈவாக எது இருந்திருக்கிறது? நீ பெற்றுக் கொண்ட மிக உயர்ந்த ஈவாக எது இருந்திருக்கிறது.

2. இத்தனை வருடங்களில் சில வியக்கத் தக்க ஈவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றான பாபிலோனின் தொங்கு தோட்டங்களை கட்டி தன்னுடைய முந்திய வீட்டில் தனிமையாயிருந்த மணப்பெண்ணுக்கு அளித்தான்.

3. தன் மனைவி யோசபினுக்கு 880 வைரங்கள் பதிக்கப்பட்ட கிரீடத்தை பரிசாக அளித்தான்.

4. ஜார்ஜ் போல்டித் என்னும் மிகப்பெரிய உணவகங்களின் உரிமையாளர் செயின்ட்லாரன்ஸ் ஆற்றினூடே உள்ள ஒரு தீவை வாங்கி அதை இதய வடிவில் அமைத்து தன் மனைவிக்கு பரிசாக அளித்தான்.

5. உங்களுடைய மிகப் பெரிய பரிசுகள் அவைகளோடு ஒப்பிடக்கூடியவைகளல்ல அவைகளும் எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பரிசோடு ஒப்பிடத்தக்கவை அல்ல. அந்த ஈவு தேவனிடமிருந்து வந்தது. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்.1:17).

6. மிகப் பெரிய ஈவு தேவ குமாரன் இயேசு கிறிஸ்து அந்த ஈவின் பயனாக நாம் இன்னொரு ஈவைப் பெற்றுக் கொள்ள முடியும் (ரோம.6:23)

7. இருப்பினும் நித்திய ஜீவனும் ஒரு ஈவே

அந்த ஈவை அளிப்பதற்கு மிகப் பெரிய விலை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பெற்றுக் கொள்ளவும் மிகப் பெரிய விலையைக் கொடுக்கவேண்டும்.

8. ஒரு இலவச ஈவுக்கு மிகப் பெரிய விலை அது எப்படிக் கூடும்?

9. இந்த முரண்பாடு போன்றது சிலசமயம் புரிந்து கொள்ள கடினமாயிருக்கும். முரண்பாடு போல் தோற்றமளிக்கும் செய்தி உண்மையாயிருக்கும்.

10. இந்தப் பாடத்தில், எப்படி இலவசமாக கொடுக்கப்படும் ஒரு ஈவு பின்வருமாறு துவங்கி மிகவும் விலையுள்ளதாயிருக்க முடியும் என்பதை நாம் சிந்திக்கப்போகிறோம்.

அ) இரட்சிப்பு என்னும் இலவச ஈவு இரட்சிப்பினை எப்படி அடைய முடியும் என்பதில் சிலருக்கு தவறான மனத் தோற்றமுண்டு.

1. அவர்கள் தாங்கள் செய்யும் நற்கிரியைகளால் இரட்சிப்பை சம்பாதிக்க முடியும் என்று எண்ணுகின்றனர்.

2. ஒரு பக்தியுள்ள முஸ்லீம் சொல்லுவதைக் கவனியுங்கள் என் வாழ்நாள் முழுவதும் குரானுக்குக் கீழ்ப்படிந்து அல்லாவை விசுவாசத்துடன் தொழுது கொண்டுள்ளேன். என்னுடைய மரணத்திற்குப் பின் குரானில் வாக்களித்தபடி மனிதன் ஆறுதலடையக்கூடிய பரதீசு என்று ஒன்றை காணாமற்போனால், நான் பரிதபிக்கக் கூடிய வகையில் வஞ்சிக்கப்பட்டுள்ளேன் என்று உணர்வேன்.

3. அநேக கிறிஸ்தவர்களுக்கும் பரலோகத்தை அடைவதில் இதேவிதமான



பாடுகளைப்போல உலகத்தில் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பு இல்லை. அவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதும் அவன் சொல்லுகிறான். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்" என்கிறான் (யோபு13:15). இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லுவது எளிது. ஆனால் அவனுடைய நிலைமையில் இருந்துகொண்டு இந்தவிதமான வார்த்தைகளை நம்மால் சொல்லமுடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றே சொல்லுவேன். ஏனென்றால், ஒரு மனிதனுக்கு உண்டான எல்லாம் பறிபோனபிறகும் அவன் உயிரோடு இருப்பதைக்காட்டில் சாவதே மேல் என்று எண்ணுவான் அல்லது தேவனை தூஷிக்க முற்படுவான். ஆனால் யோபு அந்தவிதமாக செய்யவில்லை. எல்லாமே போனாலும் அவர் அதாவது தேவன் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சொன்னான். ஆக, அவனுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா, அவனுடைய மனைவி இன்னும் நீ உயிரோடு இருப்பானேன் தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். பைத்தியக்காரி பேசுகிறதுபோல பேசுகிறாய். இவ்வளவு நாட்களாக தேவனிடத்தில் நம்மைகளைப் பெற்ற நாம் தீமைகளையும் பெறவேண்டாமோவென்றான். யாருக்காவது தீமைகளை பெற விருப்பமா? கஷ்டம் வந்தவுடன் கர்த்தர் இல்லையென்பார்கள். ஆனால் யோபோ தனக்கு வந்த கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு கர்த்தரை பின்பற்றுகிறதில் வல்லவனான்.

அன்பான சகோதரனே, சகோதரியே உனக்கு வந்த கஷ்டங்கள் பெரிதல்ல. உம்மைக்காட்டிலும் கஷ்டத்திலும் வேதனையிலும் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களை கர்த்தர் அநுதினமும் போஷித்து வழிநடத்திக்கொண்டு வருகிறார். இயேசுவின் கீர்த்தியைக் குறித்துக்கேள்விப்பட்ட நூற்றுக்கு அதிபதி தன்வேலைக் காரனுக்காக ஆண்டவர் இயேசுவை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது; "தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமானவான்" என்றான் (லூக்.7:6,7). அவருடைய கீர்த்தியைக் குறித்துக் கேள்விப்பட்ட இந்த அதிபதியின் நம்பிக்கையைப் பார்த்தீர்களா? ஆண்டவர் இவனுடைய விசுவாசத்தைக்குறித்துச் சொல்லும்போது இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். அப்படியானால் இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் நற்பது வருஷம் போஷிக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய அற்புதங்களைக் கண்ணாரக்கண்டவர்கள். அவர்களிடத்தில் கூட இப்படிப்பட்ட விசுவாசம் இல்லை. இயேசுவின் கீர்த்தியைக் குறித்து கேள்விப்பட்டு அவரிடத்தில் விசுவாசம் கொண்டு தன்வேலைக்காரனுக்காகவேண்டிக்கொண்ட இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் பெரிதாயிருந்தது. அதைப்போல கானானிய ஸ்திரீ அவரைப் பணிந்து கொண்டு பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்று சொன்ன ஆண்டவர் இயேசுவைப்பார்த்து "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" (மத்.15:27). இவளுடைய விசுவாசத்தைப் பார்த்து உம்முடைய விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் அந்நேரமே அவளுடைய மகள்

ஆரோக்கியமானாள். வேறு யாரிடத்தில் போனாலும் தன் மகளுக்கு விடுதலை இல்லை என்பதை அறிந்த கானானிய ஸ்திரீ கர்த்தரை விட்டுவிடாமல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். நாம் இரட்சிக்கப்படுவதற்கு வேறு வழி இல்லை. வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்பதை அறிந்து. உங்களை அவருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுங்கள்.

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்றார் (லூக்.11:23). ஆம், இன்று கர்த்தரோடிராதவர்கள் அவருக்கு விரோதமாயிருக்கிறார்கள். அவருடைய அன்பையும் அரவணைப்பையும் அறியாதவர்களாக இருந்துகொண்டு மேன்மேலும் கேடு உண்டாக்குகிறார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ அவரோடு இருக்கின்றாயா? அவர் உனக்காக இரத்தம் சிந்தினார். உம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை நீ அறிவாயா? இயேசுவானவர் ஒரு முறை ஜெபிக்கும்போது; "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்" என்றார் (மத்.26:38). அப்பொழுது அவருடைய ஆத்துமா என்னபாடுபட்டிருக்கும். இன்னும் சற்றுநேரத்தில் தம்மை வந்து பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்பொழுது தாம் சம்பாதித்த இந்த ஆடுகளெல்லாம் தம்மைவிட்டு ஓடிப்போய் விடும் என்பதை அறிந்த இயேவின் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டது. அந்த வேளையில் இயேசுவைப் பிடித்தவுடன் எல்லா சீஷர்களும் ஓடிப்போய்விட்டார்கள் (மத்.26:56). பேதுரு மட்டும் இயேசுவுக்கு நடக்கவுள்ள காரியங்களைப் பார்க்கும்படி வந்தான். அவனைப் பார்த்து நீயும் அவர்களில் ஒருவன் உன்பேச்சு வெளிப்படுத்துகிறது என்றவுடன் "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று" (மத்.26:74). அவரை பிடித்தவுடன் எல்லோரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். அன்பு வாசகரே, நீ ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் என்ன நினைக்கிறாய். அவருடைய வசனம் உன்னை பாவமற கழுவும். அவைகளுக்கு உன்னை ஒப்புக்கொடு.

**எல்லாரும் இயேசுவை விட்டு ஓடிப்போனவுடன் அவர் தனித்துவிடப்பட்டிருந்தாரா?**

நாம் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் நம்மை விட்டு விட்டார்கள் என்றால் நான் அனாதையாகிவிட்டேன் என்று நொந்துகொள்ளுகிறோம். அதைப்போல இயேசுவை விட்டு எல்லோரும் போனவுடனே ஆண்டவர் இயேசு நம்மைபோல அவர் நினைக்கவில்லை. ஏனென்றால் அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள் அல்லவா! பிதாவாகிய தேவன் அவருக்கு நடப்பதை அவர் கண்ணோக்கிக்கொண்டே இருந்தார். தமக்கு சம்பவிக்கப்போகிறதை முன்னமே அறிந்த கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில் பேசும்போது; "இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப்போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" என்றார் (யோவா.16:32). இந்த விதமான நம்பிக்கை இன்று நமக்குள்ளும்



# வேதாகமத்தை ஆராய்வோம் தெளிவு பெறுவோம்

-John S. Nathan
94444 43378



**வேதாகமத்தில் வகை தேடியவர்களில் நாம் யார்?**

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

லூக்கா 22:2 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் இயேசுவை கொலை செய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினாலே எவ்விதமாய் அப்படி செய்யலாமென்று வகை தேடினார்கள்

வசனம் 3 பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத் ஊரானாகிய மறுபேர்கொண்ட யூதாசுக்குள் (துதி - Praise) சாத்தான் புகுந்தான். அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும் போய், இயேசுவை காட்டிக்கொடுக்கும் வகையைக்குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான் (வசனம் 6) இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி சமயம் தேடினான் 3 1/2 ஆண்டுகளாக இயேசுவுடனே உண்ட பழகியவன் கடைசி வியாழன் இரவில் இராப்போஜனத்தை இயேசுவுடன் உண்டு சில நிமிட நேரத்தில் அவர் உயிருக்கு விலைபேசினான் ஒரு அடிமையை விலைக்கு வாங்கிடக்கூடிய கிரையமாக 30 வெள்ளிக்காசை பெற்றான்.

மத்.27:19 பெந்தியு பிலாத்துவின் மனைவியாகிய (Cladia Procula) கிளாடியா புரோக்குலா என்ற மாதாசி தன் கணவரான பிலாத்துவினிடத்தில் ஆள் அனுப்பி "நீர் இந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்றதுடன் அவரை குற்றமற்றவர், அவர் நீதிபரர் என எண்ணி அவரை விடுதலை செய்ய வகை தேடினான். பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய மூன்று முறை வகைதேடியும் தன் பிரயத்தனத்தினாலே பயனில்லை என்று கண்டு தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளை கழுவியதுடன் இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், எனக்கூறி வேண்டாவெறுப்புடன் யூதர்கள் விருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்தான்.

4. பொந்தியு பிலாத்து (AD 26-36)

-தொடரும்

## பொது அறிவு சோதனை

1. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
   அ. 500கிலோ மீட்டர் ஆ. 150 லட்சம் கிலோ மீட்டர்
2. ஜப்பான் நாட்டில் டிரைவரே இல்லாமல் ஓடும் ரெயிலின் வேகம் மணிக்கு எத்தனை கி லோ மீட்டர்?
   அ. 200 கிலோ மீட்டர் ஆ. 530 கிலோ மீட்டர்
3. இந்தியாவின் பரப்பளவு எவ்வளவு?
   அ. 5,000,000சதுர கிலோ மீட்டர் ஆ. 3,287,263சதுர கிலோ மீட்டர்
4. இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் எங்கு உற்பத்தியாகின்றன?
   அ. சதையில் ஆ. எழும்புகளின் உட்பகுதியில்
5. மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது?
   அ. பூனை ஆ. சிங்கம்

1. ஆ. 150 லட்சம் கிலோ மீட்டர்,
2. ஆ. 530 கிலோ மீட்டர்,
3. ஆ. 3,287,263சதுர கிலோ மீட்டர்,
4. ஆ. எழும்புகளின் உட்பகுதியில்,
5. ஆ. சிங்கம்

பிள்ளைகளின் ஆத்துமா கர்த்தருடையது. அவர்கள் கர்த்தருடையவர்கள் (எசேக்.18:4).

ஐனிக்கேயாள் ஓர் விசுவாசமிகுந்த தாய். அவளுக்குள் நிலைத்திருந்த விசுவாசம் அவளுடைய மகன் தீமோத்தேயுக்குள்ளும் நிலைத்திருந்தது. இது குறித்து பவுல் "அந்த விசுவாசம்... உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்" (2தீமோ.1:5) என தீமோத்தேயுக்கு எழுதுகிறான். எனவே தீமோத்தேயு ஒரு உத்தம ஊழியனாயிருந்தான். அன்பு தாயே, உங்களுடைய விசுவாசம் உங்களுடைய பிள்ளைகளுக்குள் நிலைத்திருக்கிறதா? அல்லது இக்காலத்திற்கேற்றவாறு உங்கள் பிள்ளைகளை வளர்க்கின்றீர்களா? பேதுரு, விசுவாசத்தை கூட்டி வழங்கும்படி அறிவுறுத்துகிறார் (2பேது.1:5). உங்கள் பிள்ளைகளுக்கு விசுவாசத்தை கூட்டி வழங்கி அநேக தீமோத்தேயுக்களை உருவாக்குவீர்களா?

எனக்குப் பிரியமான தாய்மார்களே, உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. நாம் நம்முடையவர்களல்ல. அப்படியிருக்க உங்களுடைய பிள்ளைகளும் உங்களுடையவர்களல்ல. எல்லா ஆத்துமாவும் கர்த்தருடையது என அறிகிறோம். கர்த்தரிடத்திலிருந்து இரவலாக பெற்றுள்ள பிள்ளைகளை உலகத்திற்கொத்த வேஷம் தரிக்க வழிநடத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்த்து பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் நடத்தி பொல்லாங்கனுக்கு நம்முடைய பிள்ளைகளை ஒப்புக்கொடுத்து விடாமல் கர்த்தருக்கே ஒப்புக்கொடுப்போம். மாம்சசிந்தைக்கு இடமளிக்காமல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையைப் பெற்று மேற்கண்ட தாய்மார்களைப் போல் முழுமனதுடனே நம்முடைய பிள்ளைகளை பிதாவின் சித்தத்திற்கு ஒப்படைத்து இம்மையிலும் மறுமையிலும் நாமும் நம்முடைய பிள்ளைகளும் காக்கப்படுவோமாக!

## நடப்புச் செய்திகள்

- அமெரிக்காவை சேர்ந்த 92 வயது பாட்டி ஒருவர் சுஜே ராக் 'அன்' ரோச் மாரத்தான் ஓட்டப்பந்தையத்தில்கலந்து கொண்டு 42 கி.மீ தூரத்தை ஓடி கடந்து இலக்கைத் தொட்டார்.
- மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தியேக அடையாள அட்டை மத்திய அரசு முடிவு.
- மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் பெண்களுக்கு தங்கும் விடுதியுடன் கூடிய தெழிற்பயிற்ச்சி.
- வெள்ளிகிரகத்துக்கு இந்தியா விண்கலத்தை அனுப்ப 2018-ம் ஆண்டு அனுப்ப திட்டம்.
- துபாயில் கடலுக்கு அடியில் டென்னிஸ் மைதானம் அமைக்க பிரபலமான கட்டிடத் தெழில் வல்லுனர் கோடாலா திட்டமிட்டுள்ளார்.



இருக்குமானால், நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. சதா காலமும் நம்முடன் இருக்கும் கர்த்தர் நம்மை காத்து, நம்முடனே கூட இருந்து கிரியை நடப்பிப்பார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிமையானவன் அல்ல. அவனோடு கர்த்தர் இருக்கிறார். தகப்பனையாவது, தாயையாவது இயேசுவினிமித்தம் இழக்கிறவன் நூறத்தனையான தகப்பனையும் தாய்களையும் பெற்று ஆசீர்வதிக்கப்படுவான். அவனை ஆசீர்வதிக்க கர்த்தர் வல்லவராயிருக்கிறார். நம்பிக்கையோடிருங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### நான் கிறிஸ்தவத்தைக் குறித்து அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா?
### *Am I Serious About Christianity?*

- என்னுடைய ஜெபஜீவியம் தேவனிலுள்ள என்னுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறதா? (மத்.6:5-15)
- நான் இயேசுவுக்காக ஒரு ஆத்துமாவையாவது ஆதாயப்படுத்தி, என்னுடைய ஜீவியம் தேவனை மகிமைப்படுத்தி மற்றவர்களும் தேவனை மகிமைப்படுத்த காரணமாயிருக்கிறதா? (மத்.5:13-16) அல்லது நான் அவரை வெட்கப்படுத்துகிறேனா?
- நான் தேவனுடைய ஊழியக்காரியாயிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேனா (பிலி.3:1; 4:4) அல்லது நான் செய்கிற ஊழியத்தைக் குறித்து ஆத்திரமடைகிறேனா?
- நான் என்னுடைய சத்துருவைக்கூட நேசிக்கிறேனா? (மத்.5:44)
- நான் ஒரு அநுதின வேதவாசிக்கிறவளாக, தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்வது பற்றி அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா?(அப்.17:11) எப்போதாவது ஆதாயம் செய்திருக்கிறேனா? (2தீமோ.2:2)
- நான் யாருக்காவது சுவிசேஷத்தை போதித்து அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேனா? (தீத்.2:11-15)
- நான் பாவங்களுக்காக மனந்திரும்பி நம்முடைய கிறிஸ்துவுக்கு விரோதமான மனநிலைகளையும் கிரியைகளையும் சரிசெய்ய மனமுள்ளவளாயிருக்கிறேனா? (அப்.17:30,31)

-மாற்கு ஷெர்ஃபீல்டு

**The Voice of Truth International**

## இயேசுவை முன் வை
## Put Jesus First

உலகம் என்னைச் சுற்றியுள்ளது இப்போ கவர்ச்சியாய் இல்லை:
இதன் இன்பங்கள் வேதனையைக் கொண்டு வருகிறது, இதன் ஞானம் வீணாயிருக்கிறது;
நான் ஒரு நிலையான, உறுதியான அடித்தளத்தை தேடுகிறேன்;
நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.



கர்த்தர் இயேசு மரித்தார் என் இரட்சிப்பு வெற்றிபெற;
அவர் எனக்குப் பதிலாக கல்வாரிக்குச் சென்று இரத்தம் சிந்தினார்;
மீட்பு என்னைத் தாண்டியது எல்லா பாவத்தையும் விட்டு விட;
நான் இயேசுவை முன் வைப்பேன் என் வாழ்வில்.

*-James D.Murch*

# சபையின் அமைப்பு
## Organizatin of the Church

J.C.Choate



சபையானது அழைக்கப் பட்டவர்களாலும், இரட்சிக்கப்பட்டவர்களாலும், உலக வழிகளை விட்டு விட தீர்மானித்திருக் கிறவர்களாலும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறவர்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இது தன் நோக்கத்தில் சர்வதேச அளவிலும், உலக அளவிலும் அமைந்துள்ளது. கிறிஸ்து தம்முடைய சபையை தாம் கட்டப்போவதாகக் கூறினார் (மத்.16:18). மேலும் சபை உலகத்தில் எவ்விடத்திலும், எங்கும் இருக்கிறது. சபையார் கூட்ட அமைப்பால் உள்ளூரிலும் சபை இருக்கிறது. வேதாகமம் கொரிந்து, தெசலோனிக்கேய, கொலோசெய போன்ற பல பட்டணங்களில் கூடிவந்த சபையைக் குறித்து பேசுகிறது (1கொரி.1:1,2; 1தெச.1:1,2; கொலோ.1). ஒருவர் உள்ளூர் சபை அங்கத்தினராக இருக்கலாம் ஆனால் அவர் உலகம் முழுவதும் எங்குசென்றாலும் அவர் உலகளாவிய சபையின் அங்கத்தினராகவுமிருக்கிறார்.

சபை தனிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது தேவன் ஏற்படுத்தின நோக்கத்திற்காக ஊழியஞ்செய்யக் கூடியதாயிருந்தால் இது பணிசெய்யும் ஒரு அமைப்பிற்குள்ளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது அவசியமாகும். இதன் தலைவர் கிறிஸ்துவே, அவர் இந்த அதிகாரத்தை எந்த ஒரு மனிதனோடும் பங்கிட்டுக் கொள்ளுகிறதில்லை. பவுல் கிறிஸ்துவைக் குறித்து, “அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்”(கொலோ1:18)எனக் கூறினார். பவுல் மேலும் எபேசு சபைக்கு, “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”(எபே.1:22,23)எனக் கூறுகிறார்.

சபையானது பூமிக்குரிய தலைமை ஸ்தாபனங்களைப் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்து பரலோகத்திலே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து அவரே சபையின் தலைவராக இருக்கிறார். சபை ஏதாவது “தலைமை ஸ்தாபனங்களை”பெற்றிருக்குமானால் பிறகு நாம் இது தமது தலைவர் இருக்கிறதான பரலோகத்தில் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்திருப்போம். “நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்” (கொலோ.3:1)என வாசிக்கிறோம். எபிரெயர்1:13-ம் இதையே போதிக்கிறது. ஆனால் உலக அளவில் சபையைக்குறித்த காரியம் என்ன? கிறிஸ்து தலையாயிருப்பதைத் தவிர உலகளாவிய அமைப்பினை சபை பெற்றிருக்கவில்லை. உள்ளூரில் சபை அங்கத்தினர்கள் சபைக்குள் குழுவாக இருக்கின்றனர், மேலும் ஒவ்வொரு சபையும் சுயமாக செயல்படுகின்றது, மேலும் இது சுயாட்சி செய்கிறது. கிறிஸ்து உள்ளூர் சபையின் தலைவராக இருக்கின்றார், அவரே தம்முடைய புதிய ஏற்பாட்டு



செயல்பட முற்பட்டனர். கர்த்தருடைய சுதந்தரமாகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்த வேண்டும் என்று அறிந்திருக்கிறீர்களா? இல்லை, அதிசயமாய் கிடைத்த என் பிள்ளை உலகத்தின் காரியங்களில் இஷ்டம்போல் நடக்கட்டும் என்றிருக்கிறீர்களா?

எலிசபெத் என்ற ஒரு தாயைக் குறித்து நீங்கள் அறிவீர்கள். லூக்.1:5-7 வரை வேதாகமம் இவளைக் குறித்து அழகாய் சாட்சி பகர்கின்றது. “அவர்கள் இருவரும்....கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்” என்று கூறுகிறது. வயது சென்றவளாயிருந்த இவர்களுக்கு கர்த்தர் யோவானைக் கொடுத்தார். இவனைக் குறித்து கர்த்தருடைய தூதன் “பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளை களிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் காத்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்” (லூக்.1:17). அந்தப்படியே யோவான், இயேசுவே உலகத்தின் ஒளி என்றும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும் சாட்சி கொடுத்து வந்தான். இந்த எலிசபெத் தான் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நடந்து வந்தபடியினால் தன் மகனையும் கர்த்தரைக் குறித்து சாட்சி கொடுக்கும்படி ஒப்புக்கொடுத்தாள். அன்பு தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை கர்த்தரைக் குறித்து சாட்சி சொல்லும்படி ஒப்புக் கொடுத்துள்ளீர்களா?

இயேசுவின் தாயாகிய மரியாளைப் பாருங்கள். மாம்சத்தில் வந்த இயேசுவைப் பெற்றெடுத்த போதிலும் பிதாவின் சித்தத்திற்கு இயேசுவை ஒப்புக்கொடுத்ததோடல்லாமல் தானும் தன்னை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஊழியத்திலே இயேசுவோடு கூட சென்று, “அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்...” (யோவா.2:5) என்று சொல்லி அநேகரை இயேசுவுக்கு நேராய் வழி நடத்தினாள். அதுமாத்திரமல்ல பிதாவின் சித்தம் செய்து ஊழியம் செய்து வந்த இயேசுவுடனே கூட அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்யும்படி தன்னுடைய மற்ற பிள்ளைகளையும் ஒப்புக்கொடுத்திருந்தாள். “சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின் சென்று ஊழியஞ்செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும்.... அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள் (மாற்.15:40,41). அன்பு தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? அல்லது ஊழியஞ்செய்யும் உங்கள் பிள்ளையிடம் உங்கள் மாம்ச அன்பைக் காட்டி பிதாவினிடத்தில் முழு அன்பு கூர தடையாயிருக்கிறீர்களா? ஒன்றை மறந்து போக வேண்டாம். உங்கள்

# தாய் – Mother

J.Glory Arjunan

பெண்கள் பகுதி



“பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாது பற்றிக்கொள்ளுவான்” என வேதம் கூறுகிறது(நீதி.22:6). உங்கள் பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்தினீர்களா? உங்கள் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய வார்த்தையை கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும் எழுந்திருக்கும் போதும் அவைகளைக் குறித்துப் பேசினீர்களா? (உபா.6:7). இல்லை யென்றால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதைக் கேளுங்கள், “இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; …அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது (எசேக்.18:4). எனவே கர்த்தருக்குரியவர்களை அவருடைய சித்தத்திற்கு ஒப்படையுங்கள். அப்படியாக ஒப்படைத்து தேவ ஆசீர்வாதம் பெற்ற சில தாய்மார்களைப் பற்றி தியானிப்போம்.

அன்னாள் ஒரு அருமையான தாய். பிள்ளையில்லை என்ற காரணத்தால் மற்றவர்களால் விசனப்படுத்தப்பட்டவளாய் கர்த்தருடைய சமூகத்தில் மனங்கசந்து அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி; சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; …என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்” (1சாமு.1:11). அந்தப்படியே அவள் ஒரு குமாரனைப் பெற்று, “….அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்” (1சாமு.1:28). தான் வெகுவாய் சிறுமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அநேக நாட்களுக்குப் பின் பிறந்த பிள்ளையை நான் எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பது என்று தயங்கினாளா? இல்லை தேவனுக்குரியதை தேவனுக்கென்று கொடுத்தாள். ‘சாமுவேல்’ என்ற பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் (1சாமு.2:26). அன்பான தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகள் இவ்விதமாய் நடந்து கொள்ளுகின்றார்களா?

பாருங்கள், மனோவாவின் மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள். “கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்கு தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார் (நியா.13:3). இதை அறிந்த இந்த தம்பதியாரோ, பிள்ளை பிறக்கும் முன்பே அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்றெல்லாம் கேட்டறிந்து கர்த்தருக்குப் பிரியமாய்



வார்த்தையின் அதிகாரத்தின் மூலம் ஆட்சி செய்கின்றார், சபையின் மனிதர் வேதவாக்கியங்களினால் வழிநடத்தப்படுகிறவர்களாக கிறிஸ்துவின் அதிகாரத்தை பூர்த்திசெய்யும்படிக்கு தலைமை தாங்கி நடத்தும் பொறுப்புடையவர் களாகயிருக்கிறார்கள். அவர்கள் போதிக்கின்றவர்களாகவும், உபதேசிக்கின்றவர்களாகவும், தரும காரியங்களையும் சபையின் சுவிசேஷப் பணியையும் திட்டமிடுகிறவர்களாகவுமிருக்க வேண்டும். மேலும் ஸ்திரீகள் மற்ற ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டியது அவசியம், ஸ்திரீகளால் பல்வேறு தரும காரியங்களையும் அந்நியரை உபசரிக்கும்பணிகளையும் மிகச்சிறப்பாக கையாள வேண்டியதும் அவசியம். மனிதரும் கூட சபைக்குரிய எந்த வேலையையும் செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்களாலும், ஆவியினாலும் வளர்கிறது போல, தகுதிவாய்ந்த முதிர்ச்சியடைந்த மனுஷர் மத்தியிலிருந்து மூப்பர்களும் உதவிக்காரர்களும், சபையின் ‘மேய்ப்பர்கள்’ மற்றும் ‘ஊழியர்கள்’ போல செயல்படுவதற்கு நியமிக்கபடும் நிலையை சபை அடையவேண்டும். அங்கு இரண்டு அல்லது அதற்கு மேலான மூப்பர்களும், இரண்டு அல்லது அதற்கு மேலான உதவிக்காரர்களும் நியமிக்கப்பட்டு தங்களுடன் ஐக்கியமாகும் அங்கத்தினர்களால் அறிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இந்த மனுஷர் வேதவாக்கியங்களில் கோடிட்டு காட்டப்பட்ட குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் (1தீமோ.3; தீத்து1).

மூப்பர்கள் (பாஸ்டர்கள், பிஷப்கள், பிரஷ்பிடர்கள் மற்றும் மேய்ப்பர்கள் என்றும் கூட அழைக்கப்படுகின்றனர்) மந்தையை வழி நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்கள். உதவிக்காரர்களும் கூட பணிவிடைக்காரர்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள். மேலும் அவர்கள் மூப்பர்களுக்கு சபை பணிகளில் உதவிக்காரர்களாக இருக்கவேண்டும். அவர்கள் வழக்கமாக சபைப்பொருட்கள் அல்லது சபையின் சரீரதேவைகளை கவனிக்கும் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

சபையில் மிக உயர்ந்த பணி உள்ளூர் சபையில் மூப்பர்களில் ஒருவராக ஊழியஞ்செய்வதேயாகும். கர்த்தர் சபையின் தனிப்பட்ட ஒரு ஆண் அங்கத்தினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளின் மேல் ஆளுகை செலுத்துபவராக ஊழியஞ்செய்ய சித்தங்கொள்ளவில்லை. ஆனபடியால், அவர் ஒரு சபையில் இருக்கும் மூப்பர்களில் ஒருவரை போலிருக்க ஒரு மூப்பரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தினார். மூப்பராக இருக்கிறவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு இணைந்து சபைப்பணிகளில் ஈடுபட வேண்டும். மேலும் பவுல் பட்டியலிட்டிருக்கிற தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும். அத்தோடுகூட கர்த்தருடைய நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு மூப்பர்கள் தங்களுக்குள்ளேயும் உள்ளூர் சபை அங்கத்தினர்களோடும் கூட இணைந்து ஊழியஞ்செய்ய கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஆடுகளை மேய்ப்பது (அப். 20:28) அல்லது சபையின் ஆவிக்குரிய போஜனத்திற்கு கொடுத்துதவுவது மூப்பர்களுடைய வேலையாயிருக்கிறது. அவர்கள் கள்ள உபதேசத்திற்கு அவைகளை விலக்கிக் காத்து பக்தியற்றவர்களையும் அவிசுவாசமுள்ள சபை அங்கத்தினர்களையும்

ஒழுங்குப்படுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். உள்ளூர் சபை போதகர்களையும், பிரசங்கியார்களையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் எல்லா அங்கத்தினர்களும் உண்மையாகவே கர்த்தருடைய ஊழியக்காரர் களாயிருப்பது அவசியம். ஆராதிக்கும்படிக்கு ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதினால் அங்கு ஒற்றுமையிருக்க வேண்டும். அவர்கள் இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுப்பதில் பிரசங்கியாகவுமிருக்க வேண்டும். சபையிலும் சமுதாயத்திலும் தேவையிலிருப் பவர்களுக்கு உதவி செய்வதில் இரக்கம் காட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களைக் கொண்ட ஒரு சபை வளர்ச்சி யடைகிறதாகவும், ஆவிக்குரியதாகவும், பிரசங்கிக்கிறதாகவும், விசுவாசமிக்கதாகவு மிருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது சபை கிறிஸ்தவம் என்பது என்ன என்பதையும், சபை தம்முடைய அங்கத்தினர்களோடு ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருப்பதையும், ஆத்தும பாரம் கொண்டிருப்பதையும் இழந்துபோனதை இரட்சிக்கவும் ஒரு நல்மாதிரியைக் கொண்டிருப்பதையும் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து கனப்படுத்துகிறதையும் மெய்ப்பிக்கிறதாயிருக்கிறது. இது ஒழுங்குப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சபையாகும்.


'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box 5, Batlagundu-624 202, S.INDIA**


தெரிந்து கொள்வோம்

## உலகின் நீளமான நதி...

- K.R.K.Ravi Asir
Associate Editor

▶ உலகின் மின நீளமான ஆறு எது என்பதில் தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் நதியா அல்லது ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள நைல் நதியா என்ற சர்ச்சை நீண்டகாலமாக இருந்து வந்தது. கடைசியாக அது கடந்த நூற்றாண்டின் மத்தியில்தான் தீர்த்து வைக்கப்பட்டது. நைல் நதியின் நீளம் 4 ஆயிரத்து 146 மைல் என்றும், அமேசான் நதியின் நீளம் 4 ஆயிரத்து 7 மைல் என்றும் இறுதியாக நிர்ணயிக்கப்பட்டு, நைல் நதியே நீளமான நதி என்று முடிவு செய்யப்பட்டது.




JOIN OUR WORLD EVANGELISM
BIBLE SCHOOL RIGHT NOW
Contact: 94435 58041




அல்லது ஆற்றம் - ரா என்று அழைக்கப்பட்டார், இவரே முதல் நபராக எந்நீடை தோற்றுவிக்கிறவராக ஷு மற்றும் டெஃப்னட், கெப் மற்றும் நட், ஆஸிரிஸ், செட், இஸிஸ் மற்றும் நெஃப்திஸ் ஆகியோரை உள்ளடக்கியவராக காணப்பட்டார். இவருடைய பிராந்திய பக்தி "ரா" வை ஒரு சூரிய தெய்வமாக ஸ்தாபித்து ஏறத்தாழ இரண்டாம் இராஜ வம்ச காலத்தில் இருந்து வளரத் தொடங்கியது. நான்காம் இராஜ வம்ச காலத்தில் பார்வோன்கள் "ரா" க்களின் வெளிப்பாடுகளாக காணப்பட்டார்கள். அவர்கள் "ரா" க்களின் குமாரர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

**தேவனை குறித்து புத்த மதத்தினரின் கொள்கை**

இந்து மதத்தை சேர்ந்த பிராமண ஆசாரிய முறைமையிலிருந்த வசைபாடுதல்கள், கேடுபாடுகளின் விளைவாக ஞான உபதேசத்தை புத்தர் தேடினார் அவர் தேவர்கள் மற்றும் தேவதைகள் பற்றிய உபதேசங்களை புறக் கணித்தார். ஏனென்றால் அவைகள் மூட நம்பிக்கையிலும், சூனிய வித்தையினாலும், தான் முடிவடைகின்றன என்று உணர்ந்தார். ஆனால் தெய்வம் இல்லாத வெற்றிடம் இப்படியாக சிருஷ்டிக்கப்பட்டது அவருடைய சீடர்கள், புத்தருக்கு சுரூபங்களையும், கட்டிட பிரகாரங்களையும் எழுப்பி, அவரை தங்களுடைய தெய்வம் ஆக்கிக் கொண்டார்கள்.

**தேவனை குறித்த ஸ்லவோனியர்களின் கொள்கை**

இந்த ஸ்லவோனியர்கள் (மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் ஸ்லவோனிக் பாஷை பேசுபவர்கள்) ஒரே வான தேவனை வணங்கினார்கள், ஆனால் இவர்களுடைய கொள்கை ஆள்தத்துவமற்ற சக்தியை குறித்த இந்துக்களின் கருத்துக்கு நெருக்கமாக இருக்கிறது இது மனுஷருடைய விஷயங்களை தனித்து வைக்கக் கூடியதாகவும், அந்த காரியங்களை அவரால் எண்ணப்படவும் கூடாத சிறிய தெய்வங்களுக்கு விடப்பட்டதாகவும் இருந்தது.

**தேவனை குறித்த சீனர்களின் கொள்கை**

கன்ஃபூஸியஸ் என்பது கிழக்கத்திய மார்க்கம்/தத்துவம். கன்ஃபூஸியஸ் மிகவும் சரியாக தத்துவம் என்று குறிப்பிடப்பட்டாலும் உலக மதங்கள் பற்றிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னவென்றால் "புத்த மதம் முதல் சொராஸ்ட்ரிய மதம் வரை அல்லாமல் மற்ற மதங்களுடனே தவிர்க்க முடியாத வகையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கன்ஃபூஸியஸ் மதம் சீன தேசத்தில் தொடங்கி கொரியா, தைவான், மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு பரவியது. இந்த கன்ஃபூஸியஸ் மார்க்கத்தின் போதனைகளுக்கு செவிகொடுக்கிற அநேக ஜனங்கள் சீனபாரம்பரிய டாவோயிஸம் மற்றும் பாரம்பரிய பிராந்திய பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் ஒருங்கிணைந்த மார்க்கத்தை சார்ந்தவர்களாய் இருக்கிறார்கள் (மத சகிப்புத்தன்மை).

ஜெபியுங்கள்

- புதிய ஆத்துமாக்களுக்காக...
- அடுத்தமாதம் குமுளியில் நடைபெறவுள்ள World Evangelism Retreat -க்காக...
- மாவட்டங்கள் தோறும் கர்த்தருடைய சபைகள் எழும்ப...
- இந்திய ஊழியங்களுக்காக...
- வேதாகம பள்ளிக்காக...



நம்பிக்கையற்றவனாகவும் இருக்கிறான்.

**தேவனை குறித்த பாபிலோனிய பொதுக் கொள்கை**

பாபிலோனிய தெய்வத்தின் பெயர் மார்துக் என்பதாகும். இதன் நேரடியான அர்த்தம் "சூரியனின் எருது கன்றுக்குட்டி" என்பதாகும் இவன் "ஈ" என்பவனுடைய புத்திரனாகவும், தேவர்களின் தலைவனாகவும் இருக்கிறான். இவன் ஒரு செழிப்பின் தெய்வமாக இருந்தான். இவன் புராதனமாக இடி மற்றும் புயல் காற்றுகளின் ஒரு தெய்வமாக இருக்கிறான். அவனுடைய மனைவியாய் இருந்தவள் சர்பனித்து.

சிருஷ்டிப்பை குறித்த பழமையானதொரு இதிகாசப் பாடலில் (எனுமா எலிஷ்) குழப்பத்தின் பெரிய மிருகங்கள் ஆகிய தியாமத் மற்றும் கிங்குவை மார்துக் தோற்கடித்தான், அங்கேயே அவன் மாபெரும் வல்லமையை பெற்றுக் கொண்டான். சர்வ லோகத்துக்கும், மனித இனத்துக்கும் சிருஷ்டிகர், ஒளிக்கும் ஜீவனுக்குமான தெய்வம் மற்றும் ஆளுகிறவர் என்றும் சொல்லிக் கொண்டு எழும்பி 50 வகையான பட்டங்களுக்கு உரிமை கோரினான். அதன் விளைவாக அவன் "ஆண்டவர்" என்று அர்த்தம் கொள்ளும் "பேல்" என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.

**தேவனை குறித்த கல்தேயர்களின் கொள்கை**

ஊர் மற்றும் ஆரான் ஆகிய பட்டணங்களில் சந்திர தெய்வமாகி நன்னாரை வணங்குவதென்பது மேலோங்கி இருந்தது. அவர் அழகாக தொங்கிக் கொண்டிருக்கும் தாடியை கொண்டவராகவும், பிறைச் சந்திரனை தன்னுடைய அடையாளமாக கொண்டவரும் 30 ஐ தன்னுடைய எண்ணாக கொண்டவருமாக இருந்தார். அவர் 'பாவம்' என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். அவர் தேவர்களின் தகப்பன் என்று அறியப்பட்டவராக இருந்தார். சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்று அறியப்பட்டிருந்தார். மேலும் சில பழமையான தேசங்கள் சந்திரன், சூரியனுக்கு பெற்றோராக இருந்ததாக கொள்கை கொண்டிருந்தன. இதனுடன் சந்திரன் ஒரு காலத்தில் அதன் வரிசையில் நீண்ட காலத்துக்கு முன்பு ஒரு சூரியனாக இருந்தது (தியாஸஃபி அகராதி).

**தேவனை குறித்த எகிப்தியர்களின் கொள்கை**

"ரா என்பது பலவிதமான உருவங்களை அடையாளப்படுத்துகிறது மிகவும் வழக்கமான உருவம் என்னவென்றால் வளைந்த அலகை கொண்ட ஒரு பருந்து பறவையின் தலையைக் கொண்ட ஒரு மனுஷன் மேலே ஒரு சூரிய ஒளிவட்டத்துடனே காணப்பட்டான், ஒரு குளவியின் தலையுடனே காணப்பட்ட மனுஷன் (அவனுடைய உருவத்தில் கெப்ரியை போன்று) அல்லது ஒரு செம்மறியாட்டு கடாவின் தலையை கொண்ட ஒரு மனுஷன் ஆகிய உருவங்களில் இருந்தன இந்த "ரா" என்பது முழு சரீரம் கொண்ட ஒரு செம்மறியாட்டு கடாவாகவும் முழுசரீரம் குளவி ஃபீனிக்ஸ் (அரேபிய பாலைவனத்தில் 600 ஆண்டுகள் வாழ்ந்து தன்னையே எரித்துக்கொண்ட ஒரு பெரிய பறவை) நாரை, பாம்பு, எருது, பூனை அல்லது சிங்கம் மற்றும் பல சிருஷ்டிகளை போன்று சித்தரிக்கப்பட்டது.

"ரா"வின் பிரதானமான அல்லது தலைமை பக்திமையம் ஹெலியோ போலிஸ் (எகிப்திய மொழியில் தூண்களின் ஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் லுனு) என்பவர் உள்ளூர் சூரிய தெய்வம் ஆற்றம் என்று அழைக்கப்பட்டார்



# பகை – Enmity

-M.Rajamani



இந்த உலகம் முழுவதும் பகைமை நிறைந்து காணப்படுகிறது. கணவன் மனைவிக்கிடையே பகை, குடும்பத்திற்கு குடும்பம் பகை, ஊருக்கு ஊர் பகை, நாட்டிற்கு நாடு பகை என்று எங்கும் பகை நிறைந்து காணப்படுகிறது. இந்த விரோத போக்கை மேற்கொள்ள பலவித நடவடிக்கைகள் முயற்சிகள் மேற்கொண்டாலும் பகை நீங்கியபாடில்லை. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லாவிதமான பகைகளையும் தான் சிந்திய சிலுவையின் இரத்தினாலே நீக்கி சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

முதலாவது தேவனுக்கும் மனிதனுக்கும் பகையை சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே.2:16). வேறுஒருவராலும் செய்ய முடியாத இந்த காரியத்தை ஆண்டவர் இயேசு செய்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீக்கிவிடுவித்தார். இப்போது யூதன் கிரேக்கன் என்று இல்லை எல்லோரும் கிறிஸ்துஇயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம் ஒரே சரீரமாயிருக்கிறோம். இயேசுவுக்கு விரோதிகள் என்று ஒருவரும் இல்லை. எல்லோருமே தேவனுடைய ஜனங்களாயிருக்கிறார்கள். பிசாசு ஒருவனே சத்துருவாயிருக்கிறான். எனவே சிலுவையில் தம்மை அறைந்த ஜனங்களுக்காக வேண்டிக்கொண்டார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிறார்களே என்றார் (லூக்.23:34).

இரண்டாவதாக சீடர்களுக்குள் இருந்த பகை. இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றார் (யோவா.13:34).

மூன்றாவது குடும்பத்திற்குள் இருக்கும் பகை. யோசேப்பின் சகோதரர்கள் அவனை பகைத்தபோது அந்த பகையை யோசேப்பு கர்த்தரின் அன்பினால் வென்று அவர்களை அன்புடன் பராமரித்தான். "நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால் பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி; அவர்களோடே பட்சமாய் பேசினான் (ஆதி.50:20,21).

நான்காவதாக கர்த்தருடைய நாமத்தை அறிவிப்பதினால் நமக்கு பகை ஏற்படும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். "என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மாற்.13:13) என்கிறார். எனவே நாம் பகையை நீக்குகிற கர்த்தரிடத்தில் நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுப்போம். ஒப்புரவாகுதலின் உபதேசத்திற்கு செவிகொடுப்போம். பகையை ஆண்டவரின் அன்பினாலே ஜெயிப்போம்.

**உண்மையான சபை தோன்றிய வரலாறும்**
**பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்**

**உண்மையான திருச்சபை**

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | மத்தேயு16:18 | அப்.2:14 | |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

**பிரிவினை சபைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லுத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டாம் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம் ......................... | | | |





ஒரு வீடு என்று
இருந்தால் அங்கு
மரம் ஒன்று
வேண்டும்

மரம் மழையைத் தரும்

**தூங்கும் முன்பு**
**தினமும்**
**வேதம் வாசியுங்கள்**



தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**








# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God?

*-Betty*

பெண்கள் பகுதி




**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகளைரத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென் பின் வந்தவைகளெல்லாம் தேவனை குறித்த கேடுபாடான கொள்கைகளாயிருக்கின்றன. மிகவும் பழமை வாய்ந்த போதனைகள் ஒரே தெய்வ வழிபாட்டை குறித்ததாக இருந்த போதிலும், சில நூற்றாண்டுகள் கடந்த பின்பு இயற்கையை வழிபடுதல், பல தெய்வ வணக்கம், விக்கிரகாராதனை பற்றிய மத நம்பிக்கைகள் உலகம் முழுவதும் பெருகின.

**தேவனைப் பற்றிய இந்து மத கருத்து**

இந்துக்களுடைய சிந்தனையின்படி கீழ்கண்ட சிறிய வேத குறிப்பானது "தேவர்களின் பிறப்பு" பற்றிய ஒரு விளக்கமாக இருக்கிறது:

"நாம் இப்பொழுது தேவர்களின் பிறப்பை குறித்து ஆச்சரியத்துடனே பேசுவோமாக... புனிதமான பேச்சின் ஆண்டவர், ஒரு கொல்லனை போன்று அவர்களை ஒன்று சேர்த்து காற்றை ஊதினார். தேவர்களின் மிக முந்திய காலங்களில் இருப்பது, ஒன்றும் இல்லாமையிலிருந்து பிறந்தது. ...இதற்கு பின்பு வானத்தின் கால் பாகங்கள் அவள் கைகளையும் தன்னுடைய சரீரத்தையும் தாழ்த்தி, கால்கள் அகன்ற நிலையில் பிறந்தன ஆதித்திலிடமிருந்து தக்சா பிறந்தாள், தக்சாவிடமிருந்து ஆதித்தில் பிறந்தாள், அவளுக்கு பின் பிறந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட தேவர்களாகவும் முடிவில்லாத இரத்த சம்பந்தமான உறவினர்களாகவும் இருந்தார்கள். ..... ஆதித்திலுக்கு எட்டு குமாரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அவளுடைய சரீரத்தினாலே பிறந்தவர்கள். ஏழு பேருடன் அவள் தேவர்கள் மத்தியில் சென்றாள் ஆனால் அவள் மார்த்தாண்டனாகிய சூரியனை ஒரு புறமாக எறிந்து விட்டாள். ஆதித்தில் தன்னுடைய ஏழு குமார்களுடன் மிக முந்திய காலத்துக்குள்ளாக சென்றாள். ஆனால் மார்த்தாண்டனை அவள் தாங்கிக் கொண்டபடியால், அதற்கு பதிலாக ஒரு குழந்தையை பெற்று பின் சீக்கிரமாக மரிப்பாள் (ரிக் வேதம், ஆலோசனை பதிப்பாசிரியர் பெட்டி ரேடிஸ்)

துளசிதாசரின் இராமாயணத்திலிருந்து குறிப்பிடப் படுகிறது, பக்கம் 399 மற்றும் 400: இந்திரன் தன்னுடைய வழிகளில் ஒரு நாளைப்போல இருக்கிறான். அவன் தேவர்களுக்கு இராஜாவாக இருந்த போதிலும் அவனுடைய வஞ்சனைக்கும், துரோகத்திற்கும் அளவில்லாமல் இருக்கிறது. அவன் மற்றவருடைய இழப்பையும், தன்னுடைய ஆதாயத்தையுமே விரும்புகிறவனாக இருக்கிறான். அவன் சூது நிறைந்தவானகவும், கெட்ட குணாதிசயம் உள்ளவனாகவும், எவர் ஒருவர் மேலும்